பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 வைகாசி 28 ஜ: ஆகிர்: 22 இதழ்: 119
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10-6-77

எரிபொருள் தட்டுப்பாடு எதிரொலி

## விஸ்வமடுவில் 200 ஏக்கர் மிளகாய் செடிகள் அழியும் நிலை!

### பெரும் பணம் முதலீடு செய்த இளைஞர்கள் அச்சம்

விஸ்வமடு, வியாழன் எரிபொருள் தட்டுப்பாட்டின் எதிரொலியாக விஸ்வமடுப் பகுதியில் சுமார் 200 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள மிளகாய்ச் செடிகள் அழியும் நிலையில் உள்ளன.

விஸ்வமடு படித்த வாலிபர் திட்டத்தின் இரண்டாம் பகுதியில் செய்கைபண்ணப்பட்டுள்ள இம்மிளகாய்ச் செடிகளுக்கு ஏற்று நீர்ப்பாசனப் பகுதியில் உள்ள பாரிய நீரிறைக்கும் இயந்திரங்கள் ஙகுவதற்கு டீசல் இல்லாமையால் இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் பெருந்தொகைப் பணத்தை முதலீடுசெய்து மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் பெரும் கிலேசமும் விசனமும் அடைந்துள்ளனர். [உ]

# வழமைபோல் ரயில் சேவை

கொழும்பு. வியாழன் கடந்த சில தினங்களாகப் பாதிக்கப்பட்ட ரயில்சேவைகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் வழமைபோல் நடைபெறும். இது சம்பந்தமான ஒரு அறிவித்தலை போக்குவரத்து அமைச்சு நேற்றுப் பகல் வெளியிட்டுள்ளது.

வழமையான ரயில் சேவைகள் கடந்த மாதம் கடைசி வாரம் முதல் பாதிக்கப்பட்டதும் இதனைத் தொடர்ந்து ரயில் சேவைகள்தாமதமாக நடைபெற்று வந்ததும் நாட்டின் நாலா பகுதிகளிலும் இரவு ரயில் (மெயில்) சேவைகள் நிறுத்தப்பட்டு, பகல் சேவை மட்டும் நடைபெற்று வந்ததும் வாசகர்கள் அறிந்ததே.

காங்கேசன்துறை - கொழும்பு ரயில் சேவைகளைப் பொறுத்த வரை கடந்த மாதம் 27-ந் திகதி காங்கேசன் துறையிலிருந்து கடைசியாக இரவு ரயில்சேவை கொழும்புக்கு நடைபெற்றது. இதற்குப் பின்னர் கடந்த மாதம் 30-ந் திகதி கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கு கடைசியாக ரயில்சேவை நடைபெற்றது. இந்த ரயில் பின்னர் 31-ந் திகதி மீண்டும் கொழும்பு மீண்டது.

கடந்த இரண்டு வார காலமாக பாதிக்கப்பட்ட காங்கேசன் துறை - கொழும்பு ரயில்சேவைகள் மீண்டும் நாளை வெள்ளிக்கிழமை இரவு முதல் கொழும்பிலிருந்து நடைபெறுகிறது. காங்கேசன் துறையை

(8-ம் பக்கம் பார்க்க)

## "இந்நாட்டில் மிருகங்களுக்கிருக்கும் பாதுகாப்பு மனிதருக்கில்லை"

### கிளிநொச்சிக் கூட்டணிக் கூட்டத்தில் உரை

கிளிநொச்சி, வியா' "மிருகங்களைப் பாதுகாக்க இந்தநாட்டில் ஒருசபை உண்டு ஆனால் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு இந்த நாட்டில் என்னஉண்டு? நாங்கள் மிருகங்களிலும், கேவலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் இருந்து விடுபடவே இன்று ஒன்றுபட்டு ஒரு விடுதலைக்கூட்டணியின் கீழ் நிற்கிறோம்."

இவ்வாறு கிளிநொச்சித் தொகுதிக் கூட்டணி வேட்பாளர் திரு.வி.ஆனந்தசங்கரியை ஆதரித்து நடைநடைபெற்ற முதலாவது பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய வண்ணை-ஆனந்தன் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் "மிருகங்களைக் காப்பாற்ற இந்த நாட்டில் சட்டம்உண்டு. தமிழரைக் காப்பாற்றுவதற்கு சட்டம் இல்லை. கடந்த 72-ம் ஆண்டிலிருந்து சுமார் ஐந்து ஆண்டுகள் 56க்கு மேற் பட்ட இளைஞர்கள் சிறையிலே அனுபவித்த இன்னல்கள் கொஞ்சமல்ல தமிழ் இளைஞர்கள் இந்நாட்டில் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே தான் ஒரு லட்சியமான இயக்கத்தின் கீழ் விடுதலைகாண இளைஞர்கள் இன்று துடிக்கின்றனர். தமிழர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவல நிலைதான். இந் நிலை ஈழத்தில் நீண்டகாலம் இருக்காது. தமிழ் ஈழம் மலரும் நாள் தூரத்தில் இல்லை. 80 நாடுகள் இந்த நாட்டில் கூடியபோது எமது நிலையை எடுத்துக் காட்டவே சிறையில் இளைஞர்கள் விரதம் இருந்தனர்."

அடுத்து சாவகச்சேரி நவம் பேசும்போது கூறியதாவது: தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிமன்றம் சென்று அடுத்த நாளே நாம் தமிழ் நாடு அமைப்போம் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. தமிழ் ஈழம் அமைப்பதற்கான பிரச்சார மேடையாகவே ஆட்சிமன்றத்தைப் பாவிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## தீண்டாமை ஒழிப்பு இயக்கம் எக்கட்சியையும் ஆதரிக்காது

யாழ்ப்பாணம், வெள்ளி எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சியையோ அல்லது தனி நபர்களையோ ஆதரிப்பதில்லை எனவும் ஒடுக்கப்பட்ட மக்கள் தேர்தலை நிராகரித்து தமது கடந்த காலப் போராட்டப் பாதையில் முன்னேறவேண்டும் எனவும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பொதுச்சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

வெகுஜன இயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் இத்தீர்மானம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

கடந்த முப்பது ஆண்டுகளாக பாராளுமன்ற முறையின்கீழ் ஐந்து லட்சம் ஒதுக்கப்பட்ட மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. இதே பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட சமூக குறைபாடு

(8ம் பக்கம் பார்க்க)

## "ஈழநாடு" பொதுத்தேர்தல் 77 போட்டி

எதிர்வரும் பொதுத்தேர்தலையொட்டி 'ஈழநாடு' நடாத்தும் பொதுத்தேர்தல் போட்டியின் விபரங்கள் 'ஈழநாடு' ஞாயிறு (12-6-77) வார இதழில் வெளிவரும். பரிசுத் தொகை: (1) 1000 ரூபா, (2) 500 ரூபா, (3) 250 ரூபா. 'ஈழநாடு' பிரதிகளுக்குடன் 'ஈழநாடு' ஏஜண்டுகளிடம் பதிவு செய்துகொள்ளுங்கள்.

## இடி அமின் "மர்மம்"

லண்டன், ஜூன் 9 உகண்டா ஜனாதிபதி ஜெனரல் இடி அமின் பொதுநல அமைப்பு நாடுகள் மகாநாட்டில் கலந்துகொள்ள லண்டனுக்குச் சென்றுவிட்டாரென உகண்டாவானொலி அறிவித்த அதே வேளையில், அவர் லண்டன் வந்து சேரவில்லை என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதே சமயம் லண்டனுக்குப் புறப்பட்ட இடி அமின் உகண்டா திரும்பிவிட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (இ)

## அப்போதிக்கரிமார் வேலைநிறுத்தம்

### நோயாளர் அவதி

யாழ்ப்பாணம், வெள்ளி பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் இரண்டாவது தினமாக நேற்றும் வேலை நிறுத்தம் செய்தனர்.

அரசினர் மத்திய மருந்துச் சாலைகளிலும் கிராமிய வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் (அப்போதிக்கரிமார்)சம்பள முரண்பாடு குறித்த கோரிக்கையை முன்வைத்து. நேற்று முன்தினம் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்..

இவ்வேலை நிறுத்தத்தினால் நோயாளிகள் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

இச்சங்கத்தின் வடபகுதிக் கிளைத் தலைவர் டாக்டர் எஸ். கோபாலசிங்கம் நேற்று வடபகுதியில் சகல கிராம வைத்தியசாலைகளுக்கும் மத்திய மருந்துச்சாலைகளுக்கும் சென்று வேலை நிறுத்த நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

(பண்-நிரு இ)

## பஸ் சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணத்திலிருந்து செயல்படும் சகல வெளியூர் பஸ் சேவைகளும் இன்று முதல் வழமைபோல் மேற்கொள்ளப்படும் என்று யாழ். பஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உ

## திருமண அழைப்பு

நிகழும் பிங்கள ஹூ வைகாசி மீ 30 ந் திகதி (12-6-77) ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு மேல்வரும் மிதுனலக்கின சுபவேளையில்

கனகரெத்தினம் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **சுந்தரலிங்கம்** அவர்களுக்கும் [கனகரெத்தினம் அன் சன் நகைத் தொழிற்சாலை, 87, கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்]

குருசாமி தம்பதிகளின் ஏகபுத்திரி திருநிறைச் செல்வி **சாரதா** அவர்களுக்கும்

யாழ். நல்லூர் முருகன் தேவஸ்தான முன்றலில் வைத்து திருமாங்கல்யம்பூண இறையருள்கூடி நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் குடும்பசமேதராய் மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

மூ. கனகரெத்தினம் தம்பதிகள் (இளைப்பாறிய ஆசிரியர்-மாமனார்) மைத்துனர்களும் தம்பதிகளும்

க. சுந்தரலிங்கம் 12, நாயன்மார் வீதி நல்லூர்.

க. மனோகரன் [மணமகன்சகோதரர்] யாழ்ப்பாணம்.

6411

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: MB 13470
அந்தோனிப்பிள்ளை கிறிஸ்தியாம்பிள்ளை
கரம்பன் கிழக்கு. ஊர்காவற்றுறை

வழக்காளி

எதிராக
சந்தையா பரமசாமியும், பெண்
பாக்கியலட்சுமியும் இருவரும்
வேலணை மேற்கு, வேலணை.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் MB/13470-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1977-ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தின் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 7960/-ம் 30-10-71 தொடக்கம் 17-7-73 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 574-65 சதம், இதில் ரூ. 4150/- கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்றிலுள்ள பெரிய சங்கன் என்னும் 10 நெற்பரப்பு நிலமும், அதுள் அடங்கிய பனைகளும், கிணறும் விடும். இதற்கு எல்லைகள் கிழக்கு சவரிமுத்து பெண் அன்னம்மாவினதும் மற்றவர்களினதும் ஆதனம். வடக்கு நடராசா பெண் மீனுச்சியினதும் மற்றவர்களினதும் ஆதனம், மேற்கு கந்தையா பெண் செல்லம்மாவின் ஆதனம். தெற்கு சண்முகநாதன் பெண் செல்லம்மாவினதும் மற்றவர்களினதும் ஆதனம்.

(2) மேற்காட்டியபடி வேலணை கோவிற்பற்று வேலணை மேற்கில் உள்ள ஈச்சம்புலம் என்னும் இருபத்தேழு (27) நெற்பரப்பு நிலம் இதற்கு எல்லைகள் கிழக்கு அருணசலம் வயிரமுத்துவின் ஆதனம், வடக்கு இரத்தினம், இரத்தின கோபாலினதும் மற்றவர்களினதும் ஆதனம். தெற்கு பொன்னையா முத்துத்தம்பியின் ஆதனம்.

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனைபரிணையாளரும்,
மதிப்பாளரும்.

தொல்புரம்,
19-4-1977. 6404

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB/15114
1. கணபதிப்பிள்ளை மாணிக்கவன்னியனும்
2. பெண் இலட்சுமியும் இருவரும்
காரைநகர் மேற்கு, காரைநகர்

வழக்காளி

எதிராக
வேலுப்பிள்ளை பேரம்பலம், கரம்பிட்டியந்தனை
காரைநகர் கிழக்கு, காரைநகர்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் MB/15114-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி, 1977 ஆனி மீ 16-ம் வ. வியாழக்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 4906/-ம் 20-11-75 தொடக்கம் 6-9-76 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுதொகைக்கும் இறுக்கும்வரை 9வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 505 36 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கிறை தும்பிய டைப்பும், தும்மிமிமாவும், வண்ணுவளவும் தேவால சீமாவும் நில பர. 16 பதினறும் கிணறும் பனைகள், வடலிகள் வான் பயிர் செய்பயிர்கள் விடுகளும் எல்லை கிழக்கு முருகேசு சுப்பிரமணியத்தின் ஆதனம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை தெற்கு றோட்டும் சின்னத்தம்பி கைம்பெண் தெய்வானையின் ஆதனமும் இதடங்கலும் முற்பதிவு இல. 370/35.

சோ. நரசிங்கம் J.P.
நீதிமன்ற விற்பனையாணையாளரும்
மதிப்பாளரும்.

தொல்புரம்,
19-4-77. 6405


சிந்தெட்டிக் கற்பூரம்
பெட்டிகளில்

கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516, ஸ்கின்னர்ஸ் றேட்டுத் தெற்கு,
கொழும்பு - 10

போன்: 24261-5


## மரண அறிவித்தல்

எஸ். எஸ். பொன்னையா

வட்டுக்கோட்டை கிழக்கைச் (தாவளை) சேர்ந்த அரசினர் ஒப்பந்தகாரர் திரு. எஸ். எஸ். பொன்னையா அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஈமச் சடங்கு வெள்ளிக்கிழமை (10-6-77) மாலை 3 மணியளவில் வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும். 6416

# நகருக்கு புதியவர்:

## அவரிடம் ரொக்கம் ரூ. 39,000

உடப்புசல்லாவை, வியா
பஸ் நிலையத்தில் சந்தேகத்துக்கிடமான விதத்தில் காணப்பட்ட நபர் ஒருவரிடம் இருந்து 39, 146 ரூபா 90 சதம் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவதினத்தன்று நகருக்கு புதியவரான இவர் பெருந்தொகையில் பணத்துடன் நடமாடுகிறார் என்று கிடைத்த தகவல் ஒன்றையடுத்து பொலிசார் இவரை பஸ் நிலையத்தில் வைத்துக் கைதுசெய்தனர்.

இவர், தான் பெலவத்தையைச்சேர்ந்த கருணரத்ன என்று தன் பெயரைக் கூறினார்.

இவரிடமிருந்து மேற்படி பணத்துடன் கைக்கடிகாரங்களும், புதிய சேட்டுகளும், புதிய பொருட்கள் வாங்கிய தற்கான ரசீதுகளும் காணப்பட்டன.

இவரது கைவிரலடையாளம் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை தொடர்கிறது. (உ)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் 22,000 பனம் விதைகள் உபகரித்துச் சாதனை உண்டாக்கினர். அவர்களுக்கு மில்க்வைற் தொழிலதிபர் 'பனைவளம் பெருக்கிய பண்பாளர்'' என்னும் பட்டத்தை நல்கிய போது மாணவர் ஒருவர் சான்றிதழ் பெறுகின்றார்.



## "சமய மரபு பேணுவதில் இந்து இளைஞர் கடமை"

புங்குடுதீவு, வியா.
''தென்கிழக் காசிய நாடுகளிலும், மேற்கு நாடுகளிலும் இன்று இந்துசமய தத்துவம் விரிவான ஆய்வுக்குட்பட்டுள்ளது. சிவவழிபாட்டின் சிறப்பினை அங்குள்ளோர், மிக்க ஆர்வத்துடன் அறியத் தலைப்பட்டுள்ளனர். இத்தகைய நல்ல தோர் சூழ் நிலையில் மலேசியா மொறிஷியஸ், பிஜித்தீவு போன்ற இடங்களிலிருந்து இந்து இளைஞர் சங்கங்களின் பிரதிநிதிகள் நமது நாட்டுக்கு வருகை தந்துள்ளமை மிக்க மகிழ்ச்சிக்குரியது. இந்துசமய கலாச்சார மரபினைப் பேணும் பணியில் இந்து இளைஞர்கள் தீவிரபங்கு கொண்டுழைக்க வேண்டும்.''

என்று தமிழ் மக்கள் இயக்கத்தலைவரும், ஊர்காவற்றுறைத் தொகுதி அமைப்பாளருமான திரு, யோகேந்திரா, துரைசுவாமி புங்குடுதீவு இந்து இளைஞர் சங்கத்தினரால் மொறிஷியஸ், மலேசியா நாடுகளைச்சேர்ந்த இந்து இளைஞர் மன்றங்களின் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

புங்குடுதீவு இந்து இளைஞர் சங்க உப தலைவர் திரு. செ. தில்லைநாதன் இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. யோகேந்திரா மேலும் பேசுகையில் இந்தோனேசியா பாலித்தீவு போன்ற இடங்களில் இந்துசமய வழிபாட்டு முறைகள் சிறப்பிடம்பெற்றுள்ளமையை நேரில் காணமுடியாதென்றும் இந்துசமய தத்துவ கலாச்சார வளர்ச்சிக்கு தொண்டாற்ற உலகளாவிய இயக்கம் ஒன்று உருவாக வேண்டியது அவசியம் என்றும் அதற்கான பணிகளில் இந்து இளைஞர்கள் முழுமூச்சுடன் ஈடுபட்டுச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மற்றும் பலரும் பேசினர். (உ)

# த.வி. கூட்டணிக்கு

## இ. தி. மு. க. ஆதரவு

வேலணை, வியாழன்
எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழீழக் கொள்கையை முன்வைத்துப் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் தமது ஆதரவை அளிப்பதென இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகம் தீர்மானித்துள்ளது.

திரு. வி. சன்முகராஜா தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றகழகத்தின்செயற்குழுக்கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

இத்தத் தேர்தலில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, நல்லூர், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய தொகுதிகளில் போட்டியிடுவதென முன்னர் செய்திருந்த முடிவை கழகம் கைவிட்டுள்ளது. (உ)

## கடத்தல் முயற்சிமுறியடிப்பு:

## அபராதம் ரூபா 19,000!

யாழ்ப்பாணம், வெள்ளி
விமான மூலம் நடைபெற விருந்த தங்கநகைக் கடத்தல் முறியடிக்கப்பட்டது.

8000 ரூபா பெறுமதிமிக்க இந்நகைகளை ஒருவர் கைப் பையில் வைத்து கடத்த முயற்சித்தபோது அதனை சுங்கப்பகுதி அதிகாரி திரு வல்லிபுரம் முறியடித்தார்.

மேற்படி நகைகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் 19 ஆயிரத்து125 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (சு-உ)

## வரி விளம்பரம்

### பயிற்சி

வெல்டிங் (Electric & Gas) இலெக்ரிக் வயறிங் ரேடியோ (Transistor) PMG Certificate வகுப்புகள். கல்வி இலாகா வினல் தொழிற்பயிற்சி நிலையமென அத்தாட்சிபெற்ற இலங்கையின் ஒரே தனியார்துறை நிலையம் இதுவே. O/L, A/L, GAQ B.A. ஆங்கில வகுப்புகள் ஆங்கில (சிறப்பு) பட்டதாரியினால் நடாத்தப்படும். National Institute of Engineering Technology, மயிற் மண்டபம் 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6365

### விற்பனைக்கு

17½ அடி நீளம் கொண்ட பிளாஸ்டிக் போட் அத்துடன் (Horse Evinbrod) மோட்டர் 24 அளக்கெட்டியான் வலை சகிதம் உடனடியாக விற்பனைக்கு. உண்டு. K. T. கார்த்திகேயன், கடற்கரை வீதி, பருத்தித்துறை. 6395

எம். ஐ. (M. I.) இன மிளகாய் நாற்றுக்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்க: வ. தம்பிராசா, லிங்கம் தோட்டம், கண்டிவீதி, வவுனியா. 6391

எட்டாம்வகுப்பு புதிய கணிதப்பயிற்சி இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது. 21 அலகுகளுக்கு பல்தேர்வு விஞவிடை விலை 4-75 ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 6378

லம்பிரட்டா ஸ்கூட்டர் இத்தாலி 150 சீ. சீ. எஸ். எக்ஸ் 5 சிறி 8207. ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி வட்டுக்கோட்டை. 6415

### தவறிவிட்டது

க. பொ. த. சான்றிதழ், பாடசாலை சான்றிதழ், பிறப்பு சான்றிதழ், கூப்பன் புத்தகம் முதலியன யாழ். பஸ்நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுப்பவர்கள், அ. பேலிக்ஸ், 177/1 குருசோல் வீதி, யாழ்ப்பாணம் என்னுமிடத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 6414

### CLASSES

ICMA, ACCA, Chartered Accountancy classes just commenced Saturdays 2—6 p.m. Sundays 8-30—12-30 a m. at the Education Centre, No. 22, Ramiah Chettiar Lane, Hospital Road Jaffna. 6403

## ராஜலிங்கத்தை ஆதரிக்கக்கோரி தீர்மானம்

சாவகச்சேரி, வியாழன்
'உடுப்பிட்டித் தொகுதியில் திரு. இராசலிங்கத்தை வேட்பாளராக நியமித்ததன் மூலம் வடபகுதியில் வாழும் ஐந்து லட்சம் சிறுபான்மை இனமக்களை தமிழர் விடுதலைக் கூட்டணி வெகுவாகக் கௌரவித்துள்ளது.

திரு. இராஜலிங்கத்தின் வெற்றிக்காக வடபகுதியிலுள்ள சகல சங்கங்களிலுமுள்ள ஊழியர்கள் தமது அரசியல் கொள்கைகளை மறந்து சமூகத்தின் விடுதலைக்காகவும் இனத்தின் விடுதலைக்காகவும் உழைக்க முன்வரவேண்டும்.

சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கக்கூட்டம் அதன் தலைவர் தலைமையில் நடைபெற்ற போது மேற்கூறப்பட்ட தீர்மானம் ஏகமனதாகத் நிறைவேற்றப்பட்டது. (அ)

# அ. இ. அ. தி. மு. க. விடம் பொருளாதாரத் திட்டம் கிடையாதா? - எம். ஜி. ஆர். விளக்கம்

## படத்தொழிலை சார்ந்த கட்சியென மத்திய அமைச்சர் தாக்கு!

சென்னை, ஜூன். 9

அனைத்திந்திய அண்ணுதிராவிட முன்னேற்றக்கழகத்துக்கு உருப்படியான பொருளாதாரத்திட்டம் எதுவும் கிடையாது என்ற எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்கு அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பதிலளித்தார்.

திருச்சியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் திரு. எம். ஜி. ஆர். பேசுகையில், ''அ. இ. அ. தி.மு.க. விடம் உருப்படியான பொருளாதாரத்திட்டம் கிடையாது எனக் கூறப்படுவது அர்த்தமற்ற குற்றச்சாட்டு. எமது கட்சி ஆட்சிக்குவரும் பட்சத்தில் அரசுநிர்வாகத்தின்சிறந்த அறிவுள்ளவர்களின் சேவை பயன்படுத்தப்படும்'' என்று கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் நாட்டை வாட்டும் வறுமை ஒழிக்கப்படும், மக்களாட்சி அமைக்கப்படும்'' என்றுர்.

**ஜனதா தலைவர்**

இதேவேளை, ஜனதாகட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் ''ஜனதா கட்சி மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டகட்சியாகும். புதிய சமூகபொருளாதாரத்திட்டத்தை அமுல்நடத்தவும் அரசியல் சாசனத்தின் 42-வது ஷாத்தை ரத்துச்செய்வதற்கும் ஜனதாகட்சியை மக்கள் ஆதரிக்கவேண்டும்'' என்றும் கூறினுர். ஜனதாகட்சி தமிழ்நாட்டில் ஆட்சி புரியத் தெரிவு செய்யப்பட்டால் சமுதாயத்தில் நலிவுற்ற, ஊனமுற்றமக்களினதுதுயர் துடைக்கும் என்றும் இளைஞர்கள், பெண்கள் முதலான சகலருக்கும் அது உதவும்'' என்றும் அவர் மேலும் சொன்னுர்.

சட்டசபைத் தேர்தல்களுக்கும், ஆகஸ்ட்மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜனுதிபதி தெரிவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்றுர் அவர்.

**ரவீந்திரவர்மா**

சென்னையில் நடைபெற்ற தேர்தல்பிரசாரக்கூட்டம் ஒன்றில் மத்திய தொழிலமைச்சர் திரு. ரவீந்திரவர்மா பேசுகையில் ''அனைத்திந்திய அண்ணு திராவிடமுன்னேற்றக் கழகத்திடம் பொருளாதாரத்திட்டம் எதுவும் கிடையாது. திரைப்படத் தொழிலைச் சார்ந்து நிற்கும் கட்சி அது'' என்று கூறினுர். உறுதியான, நிலையான அரசு அமைக்க ஜனதா கட்சியால் மட்டுமே முடியும் என்றுர் அவர்.

**சவான்**

முன்னுள் மத்திய அமைச்சர் திரு. வை. பி சவான் பொதுக்கூட்டம ஒன்றில் பேசுகையில், ''தமிழ்நாட்டில் உண்மையான தேர்தல் போட்டி அ.இ. அ தி.மு.கவுக்கும் காங்கிரஸுக்கும் இடையில்தான் நடைபெறுகிறது'' என்றுர். (உ)

## ''எம். ஜி. ஆர். கட்சியால் ஊழலை ஒழிக்க முடியாது'
### - பி. ராமச்சந்திரன்

சென்னை, ஜூன். 9

''தமிழ்நாட்டில் லஞ்ச ஊழலை ஒழிப்பதற்கு அனைத்திந்திய அண்ணு திராவிடமுன்னேற்றக்கழகத்தால்முடியாது. ஏனெனில் முன்னர் யார் மீது அக்கட்சி குற்றஞ்சாட்டியதோ அவர்களையெல்லாம் இன்று தன் வேட்பாளர்களாகத்தேர்தலில் நிறுத்தியுள்ளது'' என்று மத்திய மின்சக்தியமைச்சர் திரு பி. ராமச்சந்திரன் கூறினுர். தஞ்சாவூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில், ''உண்மையான காங்கிரஸ் கொள்கைகளையும், தலைவர் காமராஜரின் இலட்சியங்களையும் நிறைவேற்றப் பாடுபடுவது ஜனதாகட்சியே. உண்மையான காந்தியவாதிகளும், காங்கிரஸ்வாதிகளும் ஜனதாகட்சியில்தான் உள்ளனர் என்றுர்.

(7-ம் பக்கம் பார்க்க)

## தேசாய் அரசிற்கு பங். அதிபர் பாராட்டு

லண்டன், ஜூன் 9

பாரதத்திற்கும் பங்களா தேஷுக்குமிடையில் கங்கை நீர்ப்பிரச்னை தொடர்பாக சுமுகநிலை உருவாகக்கூடிய சாத்தியக்கூறுகள உண்டாகியுள்ளன என்று பங்களாதேஷ் ஜனதிபதி ஜனப் ரஹ்மான கூறினுர்.

லண்டனில் நடைபெறும் பொதுநல நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு வந்துள்ள அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரதத்தில்பதவியேற்றுள்ள புதிய அரசு இப் பிரச்னையைத் சமரசமாகத் தீர்த்துக் கொள்ள விருப்புக்கொண்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். பாரத புதிய அரசின் இந்நடைமுறை மகிழ்ச்சியளிக்கிறது என்றும் அவர் சொன்னுர். (உ)

## மணவீடு பிணவீடாகியது

புதுடில்லி, ஜூலை 9

திருமண வீடொன்றின் முன் பகுதி திடீரென இடிந்து விழுந்ததால் குழந்தைகள் உட்பட 22 பேர் துடிதுடித்து மாண்டனர்.

நெஞ்சை உருக்கும் இச் சம்பவம் உத்தரப் பிரதேஷில் நடைபெற்றுள்ளது. [உ]

## பன்சிலால் - சுக்காடியா மீது லஞ்ச விசாரணை

புதுடில்லி, ஜூன் 9

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் முன்னுள் மத்தியபாதுகாப்பு அமைச்சர் திரு. பன்சிலாலுக்கு எதிராக விசாரணைக் கமிஷன் ஒன்று ஒருவார காலத்துக்குள் அமைக்கப்படும என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் அறிவித்துள்ளார்.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அமைச்சர் இவ்வறிவிப்பை வெளியிட்டார்.

முன்னுள் ராஜஸ்தான் முதலமைச்சரும் தமிழ்நாடு ஆளுநருமான திரு. மோகன்லால் சுக்காடியாமீதான லஞ்சக்குற்றச்சாட்டுபற்றியும் விசாரணை நடத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## 'இடிஅமின் புறப்பட்டாரா? நான் நம்பவில்லை!' என்கிறுர் பிரி. பிரதமர்

லண்டன், ஜூன் 9

'லண்டனில் நடைபெற்றுவரும் பொதுநலநாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்கு உகண்டாவில் இருந்து ஜனுதிபதி இடிஅமின் புறப்பட்டிருப்பார்என்று நான் நம்பவில்லை'' என்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. கலகன் கூறியுள்ளார்.

**உகண்டா அறிவிப்பு**

இதேவேளை லண்டன் மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு கம்பாலாவில் இருந்து புறப்பட்ட ஜனுதிபதி இடிஅமின் அரபுநாடுகளில் தங்கி நின்றுவிட்டு இன்று லண்டன் சென்றடைவார் என்று உகண்டா வானெலி அறிவித்தது. [உ]


## மது தாஸர்களுக்கு மட்டுமே பர்மிட்!
### தமிழக ஆளுநர் அறிவிப்பு

சென்னை, ஜூன் 9

'மருத்துவச் சான்றிதழ் பெற்றுல்கூட இனிமேல் தமிழ்நாட்டில் மதுபர்மிட் வழங்கப்படமாட்டாது. ஆயினும்மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் என்று ஊர்ஜிதம் செய்யப்படுபவர்களுக்கு மது பர்மிட் வழங்கப்படும்' என்று தமிழ்நாடு ஆளுநர் திரு. பட்வாரி அறிவித்துள்ளார்.

சென்னையில் நிருபர்களிடம் ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளதாவது: 'தமிழ்நாட்டில் லஞ்சஊழல் முற்றுக ஒழிக்கப்படவும் மதுவிலக்குத் தீவிரமாக அமுல் நடத்தப்படவும் நடவடிக்கைள் எடுக்கப்படவிருக்கின்றன. மது மருத்துவ ரீதியில் பயன்தரவல்லது எனக்கூறப்படுவதில் உண்மையில்லை'

[உ]



### மணிவாக்கு

பொறுமையாலும் சமத்துவ நோக்கினுலும் எய்தமுடியாதது எதுவுமில்லை. நாளாந்தர வாழ்க்கையனுபவத்தால் இவ்வுண்மையைச் சரியென யாரும் அறிந்துகொள்ளலாம்.

—காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

## சீதனமும் அரசியலும்

நமது நாட்டில் பெண்ணுக்குச் சமஉரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

அரசுத்துறையிலும் சரி தனியார்துறையிலும் சரி எந்தப்பதவியையும் பெண் வகிப்பதற்குத் தடையில்லை.

லிகிதர் சேவை, நிர்வாக சேவை பொலிஸ் சேவையிலும் கூட இன்று பெண்கள் பலர் பணியாற்றுகின்றனர்.

வைத்தியத்துறையிலும் சட்டத்துறையிலும் கூடப் பெண்கள் முன்னணியில் நிற்கின்றனர்.

அரசியல் மேடைகளிலும் இன்று பெண்கள் பலர் முழக்கமிடுகின்றனர்.

எந்தப் பொறுப்பையும் பெண்களிடம் ஒப்படைத்தால் அதைத் திறமையாகவும் சிறப்பாகவும் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையை நம் நாட்டுப் பெண்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

உலகில் பிரதமர் பதவி வகித்த முதலாவது பெண் என்ற பெருமை நமது நாட்டுப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவையே சாரும்.

வீட்டினுள் பெண்களைப் பூட்டிவைத்தகாலம் போய்விட்டது.

இன்று கந்தோர்களிலும் கடைகளிலும் கடைத்தெருக்களிலும் பெண்வீறு நடைபோடுகின்றாள்.

எவ்வளவுதான் திறமையும் தகுதியுமிருந்தாலும் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டுப் படித்திருந்தாலும் சீதனம் என்ற பிரச்னைக்கு இன்னும் விடிவு கிடைக்கவில்லை.

பெண்ணைப் பெற்ற தந்தை பெண்ணுக்குத் திருமண வயது வந்ததும் தலையில் கைவைக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை இன்னமும் இல்லாமல்போகவில்லை.

என்னதான் படித்திருந்தாலும் பதவி வகித்தாலும் திருமணம் என்ற பேச்சு எழுந்ததும் சீதனம் என்ற பூதம் தோன்றுவதுகண்டு பெருமூச்சுவிடும் பெண்களின் நிலை இன்னமும் மாறவில்லை.

பத்திரிகைகளில் பகிரங்கமாகவே இன்னதொகை சீதனம் வழங்கப்படும் என்றும், இன்னதொகைசீதனம் தரப்படவேண்டுமென்றும் விளம்பரம் செய்யப்படுவது நமது நாட்டில்மட்டும்தான் இப்போது காணக்கூடியதாக இருக்கிறதென்று சொல்லலாம்.

சீதன ஒழிப்புக்கு காந்தி மகாத்மா முதலிடம்கொடுத்தார். இந்திய விடுதலைக்காக அவர் வகுத்த நிர்மாணத்திட்டத்தில் சீதன ஒழிப்பும் ஒன்றாக இடம் பெற்றது.

"பெண் துணையற்றவளல்ல. அவள்தன்னை மனிதனிலும் பலங்குறைந்தவளென்றெண்ணிவிடக் கூடாது. ஆகையால் அவள் மனிதனது கருணையைப் பெறுவதற்கு இரத்தலும் ஆகாது, அவனில் தங்கியிருக்கவுங்கூடாது" என்று காந்தியடிகள் கூறியிருக்கிறார்.

இந்தியாவில் இப்போது வரதட்சணை கொடுப்பதும் வாங்குவதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

நமதுநாட்டில் சீதன முறையை ஒழிப்பதற்குச் சட்டம் கொண்டுவரப் போவதாக எப்போதோ ஒரு குரல் கேட்டது.

சீதன ஒழிப்பு இயக்கமும் சில பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

பின்னர் இதை எல்லோரும் மறந்துவிட்டதாகவே தோன்றுகிறது.

தேர்தலில் எத்தனையோ பிரச்னைகளைக் கட்சிகளும் வேட்பாளர்களும் முன் வைத்துள்ளனர்.

இதுவரை வெளிவந்த தேர்தல் விஞ்ஞாபனங்கள் எதிலும் சீதனஒழிப்பு பற்றி யாரும் கூறிதாகத்தெரியவில்லை.

இந்த நல்ல சந்தர்ப்பத்தை பொதுமக்களாகிய வாக்காளப் பெருமக்கள் பயன்படுத்திக் கொள்வது நல்லது.

கட்சிகளிடமும் வேட்பாளர்களிடமும் சீதன ஒழிப்பு பற்றிக்குரல் எழுப்பும்படி மக்கள் குரல்கொடுப்பது பின்னர் பயனளிக்குமென்று எதிர்பார்க்கலாம்.

## தமிழர் ஒற்றுமைக்கு எதிராக இருக்கமாட்டேன் என்றார் ஜி. ஜி.

கொடிகாமம், வியா.

"தமிழர் ஒற்றுமைப்பட்டு ஒரே அணியில் திரள்வதற்கு நான் ஒருபோதும் எதிராக இருக்கமாட்டேன் என்று அமரர் ஜி. ஜி பொன்னம்பலம் மலேஷியாவில் இருந்து திரு. மு. சிவசிதம்பரத்திற்குக் கடிதம் எழுதினார் என்பது இந்நேரத்தில் நினைவுகூரத்தக்கது" என்று சாவகச்சேரி தமிழர் விடுதலைக்கூட்டணிவேட்பாளர் திரு. வி. என். நவரத்தினம் சரசாலை கணேசா சனசமூகநிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசுகையில் கூறினார்.

திரு. க. பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில், பிரிந்து செயற்பட்ட இருபெரும் கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழின விடுதலைக்குப் போராடுவதற்கு அமரர்கள் ஜி. ஜி.யும் செல்வாவும் முன்வந்தார்கள். இந்த ஒற்றுமை தொடர்ந்து பாதுகாக்கப்படவேண்டும்', என்றார். (நி-உ)

### நம்பிக்கை

திருகோணமலை, வியா.

திருகோணமலை மாவட்டவிவசாயிகளிடமிருந்து இவ்வாண்டு 1 கோடி 75 லட்சம் புசல் நெல்லைக் கொள்வனவு செய்ய முடியும் என்று நெற் சந்தைப் படுத்தும் திணைக்களம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (உ)

# "போட்டியிடும் எல்லாருமே தமிழ்ஈழம் என்கின்றனர் இது எதனை உணர்த்துகிறது?" —அமிர்

யாழ்ப்பாணம், வெள்

நாம் உருவாக்கப்போகும் சுதந்திர தமிழ் ஈழத்தில் எந்த விதமான ஏற்றத்தாழ்வுகளுக்கும் இடமிருக்க முடியாது. இதற்கு எடுத்துக் காட்டாக உடுப்பிட்டித் தொகுதி அமைகிறது. எமது தேர்தலின் முடிவை அகில உலகமே ஆவலுடன் எதிர்பார்க்கிறது. ஆகவே எமது சுதந்திர தமிழ் ஈழத்தையே ஒவ்வொரு தமிழனும் விரும்புகிறான் என்ற உண்மையை நிரூபிக்க தொண்ணூறு சத விகிதமான வாக்குகள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் போடவேண்டும். சாவகச்சேரி தமிழ் இளைஞர்பேரவையின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பேசுகையில் தமிழர் கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

சாவகச்சேரி சந்தை மைதானத்தில் சாவகச்சேரி தமிழர் கூட்டணி வேட்பாளர் திரு. வ. ந. நவரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இந்த மாநாட்டையொட்டி மாபெரும் ஊர்வலமொன்று துணுவில் சந்தியிலிருந்து. சிவகுமாரன் அரங்கை வந்தடைந்ததும். திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து கூறியதாவது தமிழினத்திற்கு இன்று மிகவும் சோதனை காலம தமிழினம் இன்று ஒரு திருப்பு முனையில் தனக்கென்று ஒரு நாடு வேண்டும், என்ற இலட்சியத்தில் தனது ஒளிமயமான சுதந்திர ஈழத்தை நோக்கிப் படையெடுத்துள்ளது. இந்தச்சுதந்திர தாகத்தைத் தடுத்து அணைபோடும் திறமை எந்த ஒரு சக்திக்கும் கிடையாது. இந்தக் காலகட்டத்தில் தான் பல கோனங்களிலிருந்தும் பலர் 'நாமும் சுயாட்சிதான் என்று கூறிவருகின்றனர்,

அன்று சுதந்திரக்கட்சியை ஆதரித்து கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பதவியைப் பெற்றவரும் இன்று தானும் தனித் தமிழ் நாடுதான் என்கிறார்.

அரசியலிலிருந்து ஒதுங்கி வாழ்ந்தவரும் மூன்றே ஆண்டுகளில் அகிம்சை முறையில் தமிழ் ஈழம் பெற்றுத் தருவதாகக் கூறுகிறார் ஆகவே மொத்தம் எமது சுதந்திர தமிழ் ஈழக் கோரிக்கையையே ஒவ்வொருவரும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். இதைப் பார்க்கும் போது நமது சுதந்திர தமிழ் ஈழக் கோரிக்கையைத் தமிழினம் ஏகோபித்து ஆதரிக்கிறது என்ற உண்மை தெளிவாகிறது.

வண்ணை ஆனந்தன், சட்டத்தரணி திரு. எம். பரராஜசிங்கம், சட்டத்தரணி திரு, என். அருணாசலம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகள் உட்படப் பலர் பேசினர் (கொடி, மட்டு, சாவ)

## 1977 பொதுத் தேர்தல் ஒரே பார்வையில்....

### 749 வேட்பாளர்கள்

அடுத்த மாதம் 21-ந் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலில் போட்டியிட மொத்தம் 749 வேட்பாளர்கள் தங்களது நியமனப்பத்திரங்களைத் தாக்கல்செய்துள்ளனர். இத்தொகையில் ஐ. தே. கட்சி 154, ஸ்ரீ ல. சு. கட்சி 147, ஐக்கிய இடதுசாரி முன்னணி [கம்யூ- ல. ச. ச. க. - மக்கள் ஜனநாயக கட்சி] 126, தமிழர் விடுதலைக்கூட்டணி 24, ம ஐ. மு. 29, இ. தொ. காங்கிரஸ் 2 தொகுதிகளாகும். சுயேச்சையாக மொத்தம் 265 பேர் போட்டியிடுகின்றனர்.

### போட்டியிடாத எம். பிக்கள்

கடந்த தேசிய அரசுப் பேரவையில் எம். பிக்களாகவிருந்த சிலர் இம்முறை போட்டியிடவில்லை. அவர்கள் விபரம் வருமாறு: மேஜர் ஜெனரல் றிச்சர்ட் உடுகம (மாத்தளை),ஜோர்ஜ் ராஜபக்ஷ (ஹக்மனை),திருமதி குசலா அபயவர்த்தன (பொரளை), டபிள்யூ. பி. ஜி. ஆரியதாச (அப்புத்தளை),ஆர். எஸ். பெரேரா (ஜாஎல),திருமதி சிவா ஒபயசேகரா(மீரிகாமம்), மைக்கல் சிறிவர்த்தன (மினுவாங்கொடை), ருக்மன் சேனநாயக்கா (டெடிகம), ஜே. டி. வீரசேகர (கொத்மலை),பி. பி. பாலசூரிய(கலிகமுவ)பிறின்ஸ், குணசேகரா (ஹபரதுவ), நோயல் விமலசேன (செங்கடகலை), பொனிஜயசூரிய [அவிசாவளை],

### பிரதமர் தொகுதி

அத்தனகல தொகுதியில் போட்டியிடும் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை எதிர்த்து ஐக்கியதேசியக்கட்சிசார்பில் செனிவரத்னவும், லங்கா சமசமாஜக்கட்சி சார்பில் சந்திரா குணசேகராவும், மக்கள் ஜனநாயகக்கட்சி சார்பில் தம்புகலவும் மற்றுமொரு சுயேச்சையாளரும் போட்டியிடுகின்றனர். பிரதமரின் நியமனப் பத்திரத்தை பிரேரித்தவர்கள் அனுமதித்தவர்களின் மொத்தத்தொகை பதினொன்காகும்.

### ஜே. ஆர்.; என். எம்.

முன்னாள் எதிர்க்கட்சித்தலைவரும் ஐ. தே. கட்சித் தலைவருமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை நான்கு அபேட்சகர்கள் தேர்தலில் எதிர்க்கின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிசார்பில் லால் கல்காடாவும், ஐக்கிய இடதுசாரி முன்னணிசார்பில் சரத் விஜேசிங்காவும் வேறுஇரண்டு சுயேச்சையாளர்களும் ஜே. ஆரை எதிர்க்கின்றனர். சமசமாஜக்கட்சித்தலைவர் டாக்டர் என். எம். பெரேரா போட்டியிடும் எட்டியாந்தோட்டைத்தொகுதியில் ஐவர் அவரை எதிர்த்துப் போட்டியிடுகின்றனர். ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியைச் சேர்ந்த முத்துதந்திரகே, ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்த வின்சன்ட் பெரேரா, மக்கள் ஐக்கியமுன்னணியைச் சேர்ந்த விஜயரத்னயக்கா மற்றும் இருசுயேச்சையாளர்கள் டாக்டர் என். எம். பெரேராவை எதிர்த்துப் போட்டியிடுகின்றனர்.

### வடக்கு, கிழக்கு

வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை, காங்கேசன்துறையில் மட்டும்தான் நேரடிப்போட்டி நடக்கிறது. தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும் திரு. எஸ். ஸ்ரீதரனும் இங்கு போட்டியிடுகின்றார்கள். மூழுத்தொகுதியிலும் காங்கேசன்துறையிலும், யாப்பகாவிலும்தான் நேரடிப் போட்டி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தொகுதிகளைப் பொறுத்தவரை தமிழர் விடுதலைக் கூட்டணிசார்பில் 24 பேரும், ஐக்கியதேசியக்கட்சி சார்பில் 17 பேரும், ஐக்கிய இடதுசாரி முன்னணி சார்பில் 7 பேரும் சுயேச்சையாக 52 பேரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 13 பேரும் மக்கள் ஐக்கிய முன்னணிசார்பில் ஒருவரும் போட்டியிடுகின்றனர். நுவரெலியா மஸ்கெலியா (மூன்று அங்கத்தவர்கள்) தொகுதியில் இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ்தலைவர் திரு. எஸ்.

(7-ம் பக்கம் பார்க்க)

## '8 கோடி தமிழர்களில் இன்றிருப்பது 6கோடிதான்'

### மாதர் மாநாட்டில் உரை

யாழ்ப்பாணம், வியா.

"எட்டுக்கோடி தமிழ் மக்களில் இன்று கணக்கிலிருபதோ ஆறுகோடி மக்கள் தான். மீதி இரண்டு கோடிமக்களும் தன் இனத்தைமறந்து, தன் மொழியை மறந்து, அன்னிய இனத்தோடு, அந்நிய மொழியோடு, சங்கமப்பட்டுவிட்டது. தமிழனுக்கென ஒரு நாடிருந்தால் இந்தப் பரிதாபநிலை ஏற்பட்டிருக்காது."

சாவகச்சேரி தமிழ் இளைஞர் பேரவையின் எழுச்சி மகாநாட்டில், மாதர் மாநாட்டில் பேசிய திருமதி இராஜபூபதி அருணாசலம் மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி மீனம்மா ஐயாத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த மாதர் மகாநாட்டில் திருமதி இராஜபூபதி அருணாசலம் தொடர்ந்து கூறியதாவது: அகில உலகிலும் நமது தமிழன் பரந்து வாழ்கிறான். அவன் இல்லாத நாடில்லை ஆனால் அவனுக்கென்றொரு நாடு தான் இல்லை. ஏன் இந்தப் பரிதாபநிலை இந்தநிலை நமக்குத் தொடர்ந்தும் இருக்கத்தான் வேண்டுமா?

"சுதந்திர தமிழ் ஈழத்தை நாம் உருவாக்க வெண்டும். அப்பொழுதுதான் தமிழனுக்கென்றொரு நாடு அமைக்க முடியும். ஏற்றத் தாழ்வில்லாத சுதந்திர ஈழத்தை அமைப்போம், தந்தை செல்வா, அமரர் ஜி.ஜி. ஆகிய தலைவர்கள் காட்டிய தமிழர் கூட்டணிப் பாதையில் செல்வோம்."

கல்முனையைச் சேர்ந்த திருமதி இராஜி சண்முகநாதனின் "துளி" என்ற கவிதை மலர் வெளியிடப்பட்டது.

செல்வி மகேஸ்வரி கைலாயபிள்ளை, காங்கேசன்துறை தமிழ் மாதர்பேரவை செயலாளர் திருமதி திலகம்ணி கணேசமூர்த்தி உட்பட பலர் பேசினர்.

### நவம்பேச்சு

"புனித உரிமைப்போராட்டத்தில் குறித்த தலைவர்களால் மட்டும் விடுதலை பெற முடியாது மக்கள் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் நாம் ஏன் விடுதலைப் போராட்டம் செய்யவேண்டுமென்பதை கடந்த கால சம்பவங்களை நினைவு கூர்ந்தால் தெரியவரும்" என்று திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கூறினார். (கொடி-மட்டு-சாவ)

# தேர்தல்பாறையில்ஒற்றுமை மோதிச் சிதறலாகாது!

## பிரசாரக் கூட்டத்தில் அமிர்தலிங்கம் பேச்சு

யாழ்ப்பாணம்,வெள்ளி

தேர்தல் என்ற பாறைதமிழரின் ஒற்றுமையைச் சிதைத்துவிடக்கூடாது. நாம் கொண்ட இலட்சியத்தை அடைந்து தமிழ் ஈழம் அமைப்பதுதான் மறைந்த தலைவர்களுக்கு நாம் செய்யும் கைமாறாகும் என்று நேற்று முன் தினம் திரு. யோசேப் பாலச்சந்திரன் தலைமையில் யாழ்ப்பாணம் முலவைச் சந்தியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர். தமிழர் கூட்டணி யாழ். அபேட்சகரை ஆதரித்து இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''யாழ். தொகுதி மக்கள் ஒரு புனிதமான கடமையை நிறைவேற்றக் காத்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே சிங்கள ஆட்சியினர் 1972ம் ஆண்டு மே மாதம் 22-ந் திகதி புதிய அரசியல் 'அமைப்பொன்றின் மூலம் தமிழினத்தை முழு அடிமையினமாக்க முனைந்த போது அதை எதிர்த்து 15 தமிழ்ப் பிரதிநிதிகளும் அதை ஆதரித்து 4 பிரதிநிதிகளும் வாக்களித்தார்கள் அப்படி ஆதரித்தவர்கள் எமது பிரதிநிதிகளே அல்ல என்று உலகிற்கு எடுத்துக்காட்ட ஒரு அரிய சந்தர்ப்பம் இன்று இந்த நான்கு தொகுதி மக்களுக்கு கிடைத்துள்ளது. நாம் தனித் தமிழ் ஈழம் அமைக்க வேண்டும் என்று முதலாவது வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றி மறைந்த மாபெரும் சட்டமேதை திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தையும், மூதறிஞர் தந்தை செல்வாவையும் திரு தொண்டமானையும் எமது தலைவர்களாக ஏற்றுக் கொண்டு எமது புனிதப் போராட்டதை நடாத்துகின்றபோது அவர்கள் நம்மை விட்டுப்பிரிந்து விட்டார்கள் எனினும் அவர்களது இல்ட்சியத்தை ஈடேற்றுவோம் என்று முனைந்து செயல்படுகின்றபோதுதேர்தல் என்னும் பாறை நம் ஒற்றுமையை சிதைத்துவிட நாம் அனுமதிக்க முடியாது. தென்னிலங்கையைப் பொறுத்தவரை ஒன்றிணைந்திருக்கின்ற லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் தமக்குள் தாம் ஒன்றுபட்டு தமது தொகுதிகளை விட்டுக் கொடுத்து வருகின்றன. அதே போன்று சென்ற பொதுத் தேர்தலில் தமிழரசு வென்ற இடங்களில் தமிழரசு வேட்பாளர்களையும், தமிழ்க் காங்கிரஸ் வென்ற இடங்களில் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர்களையும் நிறுத்தியுள்ளது. இது தவிர புதிதாக உருவாக்கப்பட்ட முல்லைத்தீவுத் தொகுதியில் நாம் தமிழ் அரசுவேட்பாளரை நியமித்து வவனியாவை காங்கிரசுக்குக் கொடுத்துள்ளோம். இந்த நிலையில் தமிழரின் ஒற்றுமையைக் குலைக்கக்கூடாது. இதுமறைந்ததலைவருக்கு நாம் செய்யும் கைமாறாகவும் இருக்காது.''

அவரைத் தொடர்ந்து பேசிய பொன். சத்தியசீலன் தமதுரையில் குறிப்பிட்டதாவது:-

''இதுவரை காலமும் 48-70 வரை நடைபெற்றுவந்த தேர்தலைப் போலல்லாது இத் தேர்தல் ஒரு திருப்புமுனை. ஒன்றுடன் ஒன்று மோதி தமிழரசு தமிழ்க்காங்கிரஸ் என்ற இரு அணிகளாகப் போராடிய கட்சிகள் இன்று தமக்குள் உள்ள பேதங்களை மறந்து ஒன்றுபட்டுள்ள நிலையில் தாம் வாழ்ந்த சுதந்திர பூமியில் தமிழ் ஈழம் அமைப்பதே தனி வழியெனத்தீர்மானித்து தமிழ் ஈழம் அமைய இத்தேர்தலை புதிய திருப்புமுனையாக பயன்படுத்தப்பார்க்கிறார்கள் இதில் தனிப்பட்டவர்களைச் சிந்திக்காமல் கூட்டணியைச் சிந்தித்து சுதந்திரத்துடன் வாழ தமிழ் ஈழமே சிறந்தவழி என்று தீர்மானிக்க வேண்டும் உலக நாடுகள் தமிழரின் சிந்தனைகளைப்பார்க்கிறார்கள். 1919ல் சங்கிலி மன்னனும் 1803ன் பின் பண்டாரவன்னியனும் இந்தச் சுதந்திர பூமியைப் பறிகொடுத்தனர். அன்று இழந்த சுதந்திர இறைமையை மீண்டும் அடைந்தே தீருவோம். நாம் சுதந்திர மனிதர்களாக இத் தமிழ் நாட்டில் தான் வாழ்வோம். இன்று சிங்கள மக்கள்கூட எமது தேர்தல் முடிவுகளை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலகட்டத்தில் நாம் கூட்டணி அபேட்சகர்கள் அனைவரையும் பாராளுமன்றம் அனுப்ப வேண்டும்''என்றார்.

திரு. எம். கே. அந்தனிசில் தமது உரையில் நமது தமிழரசர்கள் ஆண்ட கண்டியை, அனுராதபுரத்தை, பொலனறுவையை தா என்று நாம் கேட்கவில்லை ஆனல் நமது தமிழ் மண் தமிழருக்கென தனிநாடாகவேண்டும். அதற்காகவே நாம் போராடுகின்றோம் என்றார்.

தேசிய அரசுப் பேரவையில் தந்தை செல்வா மிக ஆணித்தரமாக தமிழ் ஈழக் கோரிக்கையைக் கேட்டார். இந்தக் தேர்தலின் முடிவில் வாழ்வா? சாவா?எழுச்சியா? வீழ்ச்சியா? என்பது புரிந்து விடும் என்றும் திரு. அந்தனிசில் கூறினர்.

மகளிர்பேரவையைச்சேர்ந்த செல்வி அங்கயற்கன்னி தமது உரையில், அற்ப சொற்ப சலுகைகளுக்காகவல்ல இந்தத் தேர்தல் இன்று நாம் கொண்டுள்ள இலட்சியத்தை அடைய வேண்டும் என்று அயராது பாடுபட்டுவரும் இளைஞர்களுக்கு வழிகாட்டி பல வழிகளிலும் துணைநிற்பவர் திரு. யோகேஸ்வரன் தமிழ்ஈழம் மலர அவரது கொள்கையை முன்வைத்து எமது லட்சியத்தை நாம் அடைய அவருக்கு வாக்களிக்கவேண்டும் என்றார்.

திரு. யோகேஸ்வரன் தமது உரையில், ''இந்தத் தேர்தலில் நான் தனிய யோகேஸ்வரனகப்போட்டியிடவில்லை எமது இயக்கத்தின் கொள்கையை முன்வைத்து தமிழ்ஈழம் காணும் இலட்சியத்திற்காக உழைக்கின்ற இளைஞர்களுடன் தோளோடு தோள்நின்று இந்த நாட்டில் தமிழர்கள் இழந்த உரிமையைப் பெற்றுத்தரப் பாடுபடுவேன். நீங்கள் அடிமைகளாக வாழவிரும்புகிறீர்களா? அல்லது சுதந்திர புருஷர்களாக வாழவிரும்புகிறீர்களா என்பது உங்கள் வாக்குகளில் தங்கியுள்ளது'' என்றார்.

(கி-கா)

## ''தமிழினத்துக்கு வழிகாட்டக் கூடிய தலைவர் நவரத்தினமே''

வண்ணர்பண்ணை,வியாழன்

''தமிழர் சுயாட்சிக்கழகம் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு 21-8-76 சமர்ப்பித்த தனியாட்சி அமைக்கும் திட்டத்தை, தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று பகிரங்கமாக ஏற்றுக்கொண்டால், தமிழர் சுயாட்சிக்கழகம் தேர்தலிருந்து விலகி நிற்க தயாராக இருக்கிறது''.

இவ்வாறு மண்டைதீவில் நடந்த தமிழர் சுயாட்சிக் கழக கருத்தரங்கில் உரையாற்றிய தமிழர் சுயாட்சிக் கழக துணைச்செயலாளரும் சட்டத்தரணியுமான திரு. ந. ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

மண்டைதீவு கிழக்கு உதய சூரியன் சனசமூக நிலைய முன்றலில் திரு. மா. இரத்னவிநாயகம் தலைமையில் நடந்த இக் கருத்தரங்கில் திரு. ஸ்ரீகாந்தா தொடர்ந்து பேசுகையில் இன்றைய அரசியல் சூழ்நிலையில் சுயாட்சிக் கழகத் தலைவர் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டால் தான் தமிழ் இனத்தின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும். தமிழினத்திற்கு எந்த ஒருசதித்திட்டமும் நடக்காமல் இருப்பதற்கு ஒரு பாதுகாவலர் தேவை என்றால் தீவுப்பகுதி மக்கள் திரு. நவரத்தினத்தை நிச்சயம் பாராளுமன்றம் அனுப்பியே ஆகவேண்டும் ஊர்காவற்றுறைத்தொகுதி மக்களின் இந்தமுடிவையே வடக்குக்கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ்பேசும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். தமிழினத்தை இனிமேல் தொடர்ந்து வழிநடத்த தகுதியும், தியாகமும், நிறைந்த தலைவர் நவரத்தினமே யாகும் என்றார்.

கட்சித்தலைவர் திரு.வ. நவரத்தினம், திரு. சிவயோகநாதன், திரு. வே. இராசரத்தினம், திரு. இ.தில்லைநாதன் உட்பட பலர் உரையாற்றினர்.

## ''தொண்டமான் தனியாகக் கேட்கலாம் நான் கேட்கக்கூடாதா?''

— ஜி. ஜி. பொன்னம்பலம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''கூட்டணியின் ஒற்றுமையைக் குலைப்பதாக எனக்கெதிராகப் பிரசாரஞ்செய்துவருகிறார்கள். பண்ணாகத்திலே தமிழர் விடுதலைக் கூட்டணி 'தனித் தமிழ் ஈழக்' கோரிக்கையை நிறைவேற்றியதும், அதனை எதிர்த்து அறிக்கை விட்டவர் இன்றைய கூட்டணியின் ஒரே தலைவரான திரு. தொண்டமானவார். அவர் இந்தப் பொதுத் தேர்தலில் தமக்கென அங்கீகரிக்கப்பட்ட தனிக் கட்சியையும், தனிச் சின்னத்தையும் பெற்றுப் போட்டியிடுகிறார். இதுவரை. அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் கூட்டணி எடுத்ததாகத் தெரியவில்லை. இது ஏற்றுக்கொள்ளக்கூடிய தென்றால் நான் சுயேச்சையாகப் போட்டியிடுவதுதான் ஒற்றுமையைக் குலைக்கிறதா?''

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினர்.

கூட்டத்திற்கு முன்னதாக ஒரு மைல் நீளமான ஊர்வலமொன்றும் முஸ்லிம் வீதிகள் ஊடாக இடம்பெற்றது. இளைக் காரியாலயம் ஒன்றும் முஸ்லிம் வட்டாரத்தில் திறக்கப்பட்டது.

அவர் மேலும் கூறியதாவது:

''இன்று மாவை சேனாதிராசா தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளைகளைக் கலைக்கச் சொல்லுகின்றார். 1972ம் ஆண்டு வல்வெட்டித்துறை ஒற்றுமை மாநாட்டில் தமிழரசு வாலிப முன்னணி கலைக்கப்பட்டு இளைஞர் பேரவையாக இயங்குமென்று சொன்ன மாவை. சேனாதிராசா இப்படிக் கோருவதை விளங்கிக்கொள்ளமுடியாமல் இருக்கிறது.

''இளைஞர் பேரவைக்கும், கூட்டணிக்கும் இடையில்கூட கருத்துவேறுபாடு உண்டு. கூட்டணியினர் அகிம்சைப் போர் என்று சொல்கிறார்கள். இளைஞர் பேரவையினர் அறப் போர் என்று சொல்கிறார்கள்.

''இளைஞர் பேரவையினர் தேர்தலில் நம்பிக்கையற்றவர்கள். கூட்டணியினர் ஜனநாயக முறையில், பாராளுமன்றம் மூலம் செயற்படுவதை நம்பிக்கையாகக் கொண்டவர்கள். இவ்விதம் நேர் விரோதக் கொள்கையுடைய இரு இயக்கங்கள் எப்படி ஒன்றுபட்டு இயங்குகின்றனவோ எனக்குத் தெரியாது.

''சுயேச்சையாக யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடுகின்ற எனது செயல் திட்டம் யாழ்ப்பாணத் தொகுதியைப் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்வதும், தொகுதி மக்களின் முன்னேற்றமுமாகும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் அங்கத்தவன் என்ற ரீதியில் தமிழ் மக்களது அடிப்படைப் பிரச்னைகளில் எனது ஆலோசனைகளைச் சொல்லித் தொகுதி மக்களது அபிப்பிராயத்தைக் கேட்டு நடப்பது எனது கடமையாகும்.''

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிச் செயலாளர் திரு. ஆர் ஈ. ஆனந்தராசா பேசுகையில் கூறியதாவது: ''மன்னார் இடைத் தேர்தலில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தை அங்கு கூட்டணி சார்பில் போட்டியிடுமாறு மன்னார்த் தொகுதி முஸ்லிம்களும், தமிழர்களும் கோரிக்கை விடுத்தனர். ஆனல் கூட்டணியினர், உள்ளூர்வாசிதான் மன்னாரில் போட்டியிட வேண்டுமெனத் தீர்மானித்தனர். இன்று உடுப்பிட்டி சிவா நல்லூரிலும், வட்டுக்கோட்டை திரு. அமிர்தலிங்கம் காங்கேசன்துறையிலும், காங்கேசன்துறை திரு. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டையிலும் போட்டியிடுகின்றனர். இதனைத் தமிழ்மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் ''

ஜனப் நூர்முகமது பேசுகையில் கூறியதாவது: ''நம் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் முஸ்லிம் மக்களுக்குக் கடந்த காலத்தில் செய்த சேவைகளை நாம் மறந்துவிடவில்லை. அதற்குக் கைமாறாக இம்முறை அவரது புதல்வருக்கே ஆதரவளிக்க முஸ்லிம் மக்கள் காத்திருக்கின்றனர்.''

திருவாளர்கள் எஸ். சிவரத்தினம், ரி.சற்குணம், எஸ். மனோகரன், எம். செல்வநாதன், ஏ. கதிர்காமநாதன் ஆகியோரும் பேசினர். (சு)

## நாடும் நயமும்



மயிலர்: அந்த வேட்பாளர் நல்லமனிசனயிருக்கு... வழியில் நிற்பவர்களெல்லாரையும் காரில் ஏற்றிக் கொண்டுதான் போவார்.

வேலர்: பெற்ருேல் தட்டுப்பாடு காலம்... வழியில் கார் நிண்டால் தள்ளுறதுக்காகவும் ஏற்றிக்கொண்டு போவார்.

—சுந்தர்

## த வி கூட்டணி சாதித்தது என்ன?

—குமாரசாமி

கொடிகாமம், வியா.

'தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள தமிழர் விடுதலை கூட்டணி சாதித்தது என்ன?' என்று சாவகச்சேரி தொகுதியில் ஜி. ஜி. காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. வி. குமாரசாமி வினவினர்.

சாவகச்சேரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் மேலும் பேசுகையில், 'மக்கள் பட்டினியால் வாடு

(7-ம் பக்கம் பார்க்க)

சுன்னுகத்தில் சம்பவம்:

# ரயில் விபத்தில் கால் இழந்த யுவதி!

யாழ்ப்பாணம், வெள்ளி ரயில்விபத்து ஒன்றில் சிக்கிய யுவதி ஒருவர் தமது இரு கால்களையும்இழந்தார்,

இச்சோகச் சம்பவம் சுன்னுகத்தில் நிகழ்ந்தது.

கமலாதேவி(வயது16) என்ற இந்த இளம்யுவதி சம்பவ தினம் கொழும்பில் இருந்து வந்த யாழ்தேவியில் பிரயாணம்செயததாகவும் சுன்னுகம் ரயில் நிலையத்தில் அவர்இறங்க முற்பட்டபோது தவறுதலாக கீழே விழுந்ததாகவும் இதனுல் அவரது இரு கால்களும் துண்டிக்கப்பட்டதாகவும் மூன்று கைவிரல்களும் துண்டிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர் தற்போது யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (உ)

## ஞானத்தந்தை தம்பையா மாஸ்டர்

எளிமைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவரும் அறிவியல் மேதையுமான மாணவர்கள் அன்பர்கள் யாவராலும் தம்பையாமாஸ்டர் என அன்பாக அழைக்கப்பட்ட ஆசிரியப் பெருந்தகைஜோன் ஞானசுந்தரம் தம்பையாவின் மறைவு ஒரு **பேரிழப்பாகும்.**



இவர் யாழ். பரி யோவான் கல்லூரியில் தம் இளமைக் கல்வியைப் பெற்ருர். சீனியர் கேம்பிறிட்ஜ் பரீட்சையில் சிறப்புற சித்திஎய்தி பின் மாரகமை அரசினர் ஆசிரியபயிற்சிக்கலாசாலையில் கல்விபயின்று பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரால் தம் ஆசிரிய வாழ்வை தாம்பயின்ற யாழ். பரியோவான் கல்லூரியில் ஆரம்பித்தார். உரும்பராய் மிஷன்பாடசாலை, கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி, கைதடிமிஷன் பாடசாலை, ரத்மலானை இந்துக்கல்லூரி முதலியபாடசாலைகளில் கடமையாற்றி பின்னர் நல்லூர் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக கடமையாற்றி 1969-ம் ஆண்டு ஓய்வு பெற்ருர்.

சுமார் 20 வருடங்கள் விரிவுரையாளராக கடமையாற்றிய இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை மிகுந்தவராகத் திகழ்ந்தார்.

ஆசிரிய சமூகத்திற்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய தம்பையா மாஸ்டர் தனிப்பட்ட வாழ்விலும் யாவராலும் நேசிக்கப்பட்ட ஒரு பெருந்தகையாளஞக வாழ்ந்தார்.

"உன்னைப் போல் அயலவனையும் நேசி" என்ற கர்த்தரின் தெய்வீக வாக்குக்கிணங்க உண்மையான கிறிஸ்தவஞக வாழ்ந்த அவர் எந்த ஒரு இதயம் மற்றவர் துயர் கண்டுதுடிக்கிறதோ அந்த இதயம் தான் கோயில்; அந்த ஆத்மாதான் தெய்வம் என்பதற்கிணங்க நடமாடும் அன்புக்கோயிலாகவும்திகழ்ந்து சென்ற மாதம் 12-ந் திகதி தமது 68-ம் வயதில் கர்த்தரின் நிழலில் சேர்ந்தார்.

தம் இறுதி மூச்சுவரை ஒரு சிறந்த ஆசிரியஞக வாழ்ந்து மறைந்த எம் ஆசிரியர் ஞானத்தந்தை தம்பையா மாஸ்டர் அவர்களின் ஆத்மா அமைதியுற பிரார்த்திப்பதே எம் ஆசிரியருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

—செல்வி லலித்தா வல்லிபுரம்

4ம், 5ம் தர அதிபர்களை

# 3-ம் தரமாக்கக் கோரி தீர்மானம் வருகிறது

கொழும்பு, வியாழன் நாலாந்தர, ஐந்தாம்தர அதிபர் பதவியை நீக்கி மூன்ரும் தர அதிபராக யாவரையும் ஆக்கவேண்டும் எனக்கோரும் தீர்மானம் ஆசிரியர் சங்கங்களினதும் அதிபர்கள் சங்கங்களினதும் கூட்டுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. இக் கூட்டம் இம்மாதம் 11-ம் திகதி காலை கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இலங்கை ஆசிரியர் சங்கம் இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் அ. இ. அதிபர்கள் சங்கம் இ. ஐ. அதிபர்கள் சங்கம்,ஆசிரியர் கல்விப்பிரதேச அதிபர்கள்சங்கம் ஆகியவையே இத் தீர்மானத்தை கொழும்பில் கூடி எடுக்கவிருக்கின்றன.

சகல பட்டதாரிகளுக்கும் பட்டதாரிச்சம்பளம் வழங்க வேண்டுமென்றும் பழையபயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு சம்பள மாற்றம் தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களுக்கு ஆரம்பச்சம்பளம் கூட்ட வேண்டுமென்றும் கோரும் தீர்மானங்கள் உட்பட மொத்தம் பதினெரு கோரிக்கைகளை முன் வைத்து இக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

மற்றும் தீர்மானங்களின் விபரம் வருமாறு: சேவை செய்யும் பாடசாலைக்கு வெளியே நடைபெறும் பாடசாலை அதிபர் கூட்டத்துக்குச் செல்ல பிரயாணச் செலவு வழங்கப்படாவிடின் அதற்குச் செல்வதில்லை; அத்துடன் வட்டார விளையாட்டுப்போட்டிக்கூட்டம் பொருட்காட்சிஅமைப்புக் கூட்டம் என்பவற்றுக்கு பிரயாணச் செலவின்றிச் செல்வதில்லை.

"பாடசாலை நேரத்தின் பின் வெளிவேலை எதிலும் பங்குபற்றுதல்;

பாடசாலைப் பரிசோதனைக் குழு பாடசாலைக்கு வரும் பொழுது அவர்கள் பாடசாலையிலிருந்துவெளியேறும் வரை பாடசாலையில்கற்பித்தல்" (உ)

## விபத்தில் வாலிபர் பலி: சந்தேக நபர் பிணையில்

ஆனைக்கோட்டை, வெள்ளி கொக்குவிலில் நேற்று முன் தினம்நடந்த மோட்டார் சயிக்கிள் விபத்து ஒன்றில் சயிக்கிளில் சென்ற 17வயது வாலிபர் பலியாஞர்.

கொக்குவிலைச் சேர்ந்த சபாரத்தினம் திருக்காந்தனின் மரணவிசாரணையில் மேற் கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்திஞர்.

சம்பவதினம் காலையில் தம்பியாரின் சயிக்கிளில் சென்றவர். பஸ் ஒன்றை விலத்தும்போது எதிரில் வந்த மோட்டார் சைக்கிள்மோதியதாக விசாரணையில் கூறப்பட்டது.

சந்தேகநபரான உக்கு பண்டா திஸநாயக்காவை 1000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதித்து, பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை மரண விசாரணை அதிகாரிஒத்திவைத்தார். [க அ உ]

## யாழ். தொகுதியில்இவருக்கு ஜி. ஜி. காங்கிரஸ் ஆதரவு

யாழ்ப்பாணம்; வெள்ளி யாழ்ப்பாணத் தொகுதியில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை ஆதரிப்பதென தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

கோண்டாவிலிலுள்ள ஜி. ஜி. காங்கிரஸ் தலைமைக்காரியாலயத்தில் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் நடந்த கமிட்டிக்கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

காங்கேசன்துறைத்தொகுதியில் சிவ. சிறீதரனையும், பருத்தித்துறைத் தொகுதியில் திரு. என். நடராசாவையும் ஆதரிப்பதென்றும் ஜி. ஜி காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

## கிராமசேவகராக நியமனம்



சுமார் பத்து வருடங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் உதவி ஆசிரியர்களில் ஒருவராகப் பணியாற்றிய திரு. எஸ். கே. காசிலிங்கம் கிராமசேவையாளராக நியமனம் பெற்றுள்ளார்

அனலைதீவைச் சேர்ந்த இவர் பிரசித்திபெற்ற அனலைதீவு ஐயஞர் ஆலய பரிபாலன சபையின் துணைச்செயலாளராகவும், அனலைதீவு ஐயஞர் ஆலய அன்னதானசபையின் துணைத் தலைவராகவும் அனலைதீவு இணக்க சபையில் ஓர் அங்கத்தவராகவும் பணியாற்றிவரும் இவர் திருநெல்வேலி கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவராகவும் சேவையாற்றுகிருர். (உ)





RIO
(Jaffna)

Daily 10-30, 4-45, 7-15, 9-45.

யாழ்ப்பாணம் இதற்குமுன்னர் பார்த்திராத, இனிமேல் பார்க்க முடியாத மிக மகத்தான வெளியீடு!

அலிஸ்ரேர் மக்ளீனின் பிரபல்யமிக்க நாவல் இப்பொழுது பரபரப்பூட்டும் திரைவிருந்தாக வந்துள்ளது! "Guns of Navarone", "When light Bells Toll", "Where Eagles Dare" – ஆகிய படங்களைத் தொடர்ந்து இப்பொழுது—

Alistair Maclean's
CARAVAN TO VACCARES

[கறவான் டு வக்கறீஸ்]

விஞடிக்கு விஞடி அபாயம் நிரம்பியது— திகிலும் விறுவிறுப்பும் ஊட்டும் சம்பவங்கள் நிறைந்தது.

மர்மம் - திகில் - பரபரப்பு

(More suitable for adults)
(SCOPE) (COLOR)

# 'தேர்தலில் என்னை இறக்கியவர்கள் மக்களே'

மட்டக்களப்பு, வியா

'எனக்கு ஆட்சி மன்றம் போகும் எண்ணம் இருந்ததில்லை ஆயினும் தமிழின விடுதலைப் போராட்டத்தின் இலட்சியத்தை அடைவதற்காக மட்டக்களப்புத் தமிழ் பேசும் பொதுமக்கள் என்னைத் தேர்தலில் இறக்கியுள்ளார்கள்'.

மட்டக்களப்புத் தொகுதியில்உள்ள தன்னுமுனையில் தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளையொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில், தொகுதி வேட்பாளர்களில் ஒருவரான கவிஞர் காசிஆனந்தன் மேற்கண்டவாறு கூறினார். இவ்வைபவத்திற்கு ஏருவூர் வடக்குக் கிராமசபைத் தலைவர் திரு. சி. ஆலாலசுந்தரம் தலைமைவகித்தார்.

திரு. காசி ஆனந்தன் தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது:

'எனது சிறியதகப்பனரான ஆர். வி. கதிர்காமர் 1953-ம் ஆண்டு பொதுத்தேர்தலில் குதித்தபொழுது தமிழரசுக் கட்சியின் இலட்சியத்துக்காக அண்ணன் திரு. செ. இராசதுரையின் வெற்றிக்காக உழைத்தேன். உறவினரைப் பகைத்த எனக்கு வீட்டில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட நான் மட்டக்களப்பு கோட்டடிஅரசடிப் பிள்ளையார் கோவிலில் பல மாதங்களைக் கழித்தேன். இன்றும் தமிழினத்தின் இலட்சியத்துக்காகத் தேர்தலில் நான் தமிழ் பேசும்மக்களால் இறக்கிவிடப்பட்டிருக்கிறேன். இதனால் தான் தொடர்ந்து எமது இயக்க இலட்சியத்தைவைத்து துரிதமாக்கும்படி என்னை ஒரு கருவியாக்கியுள்ளார்கள்.

'நான் பாடசாலையைவிட்டும், வீட்டைவிட்டும் துரத்தியடிக்கப்பட எந்த இலட்சியம் காரணமாக அமைந்திருந்ததோ அதே இலட்சியத்துக்காகவே நான் போராடிக்கொண்டிருக்கிறேன். தமிழினத்துக்காக எங்கெங்கு விடுதலைப்போராட்டத்தை எவ்வாறு செய்தேன் என்பதை தமிழ்பேசும் மக்கள் நன்கு அறிவார்கள்'.

மேற்படி வைபவத்தில் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த பிரதிநிதிகளும் தமிழ்மகளிர் பேரவை, த.வி. கூட்டணி பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள்.

## ஒரே பார்வையில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டமான், ஸ்ரீ ல. சு. கட்சி திரு. அனுரா பண்டாரநாயக்காவுடனும், ஐ.தே.கட்சி திரு. காமினி திஸநாயக்காவுடனும் ஐக்கிய இடதுசாரி முன்னணி திரு. ஆரியதிலகாவுடனும் மற்றும் பத்து சுயேச்சையாளர்களுடனும் மோதுகின்றார்.

### கொப்பேகடுவ; மைத்திரி

யட்டிநுவர தொகுதியில் போட்டியிடும் அமைச்சர் கொப்பேகடுவ, மதவாச்சித் தொகுதியில் போட்டியிடும் அமைச்சர் மைத்திரிபாலசேனநாயக்கா ஆகிய இருவரையும் ஐக்கியதேசியக்கட்சிதான் பிரதானமாக எதிர்க்கிறது. யட்டிநுவரவில் சுனில் அபேசுந்தராவும், மதவாச்சியில் ஆரியதாசாவும் ஐ. தே. கட்சி சார்பில் போட்டியிடுகின்றனர். இவர்களுடன் சுயேச்சையாளர்களும் போட்டியிடுகின்றனர்.

### 'வாசு', டாக்டர் எஸ். ஏ.

முன்னாள் லங்கா சமசமாஜக் கட்சி இளைஞர் தலைவர் வாசுதேவ நாணயக்காரவை ஐக்கிய இடதுசாரி முன்னணி எதிர்க்கவில்லை. ஐ. தே. கட்சி சார்பில் மேர்வின் குலரத்னவும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் ஜயவர்த்தனவும் மற்றுமொரு சுயேச்சையாளரும் (எஹலியகொடவில்) 'வாசு'வை எதிர்த்துப்போட்டியிடுகின்றனர். கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவை ஐக்கிய தேசியக்கட்சியும்ஸ்ரீ ல. சு. கட்சியும் எதிர்க்கின்றன.

## எம். ஜி. ஆர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### காங்கிரஸ் தலைவர்

இதேவேளை, மதுரையில் நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டமொன்றில் காங்கிரஸ் தலைவர் திரு. பிரமானந்த ரெட்டி பேசுகையில், ''சட்டசபைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு உண்டு'' என்று நம்பிக்கை தெரிவித்தார் (உ)

## த. வி. கூட்டணி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்கள் இக்குறை தீர்க்கப்படவேண்டும். ஹர்த்தால் நடத்துவதாலும், பாடசாலைகளைப் பகிஷ்கரிப்பதாலும் மட்டுமே நன்மைகிடைக்கப்போவதில்லை' என்றார். [உ]

## இன்று தீமிதிப்பு

மட்டுநகர்,வெள்ளி

வவுணதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தீமிதிப்பு விழாவும் பள்ளயமும் இன்று நடைபெறுகின்றன. இவ்வாலய மகோற்சவம் கடந்த 7-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (அ)


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
விஜயகுமார்-சுஜாதா
அவள் ஒருதொடர்கதை

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
முத்துராமன் - சுஜாதா
வாழ்ந்து காட்டுகிறேன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், (இருவேடங்களில்) உஷா நந்தினி, சௌகார் ஜானகி
மனிதனும் தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்) 5-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL (JAFFNA) Daily: 10-30 a. m, 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
OMAR SHARIF JULIE ANDREWS
in
THE TAMARIND SEED
(Color)

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டுள்ளது
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

சாந்தி யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்
போன்; 7642
10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன் ஃ சௌகார் ஃ மேஜர்
ஃ பாலையா ஃ நாகேஷ்
நடித்த
கே. பாலசந்தரின்
பாமா விஜயம்
(புதிய பிரதி)

வெலிங்டன் [யாழ். நகர்]
ரஞ்சன் நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
நீலமலைத்திருடன்

லிடோ போன்: 7693 (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி — சாவித்திரி நடித்த
வடிவுக்கு வளைகாப்பு

வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
A. V. M. ராஜன் - லக்ஷ்மி
அகத்தியர்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
இன்று முதல் குதூகல ஆரம்பம்
சிவாஜி கணேசன், பத்மபிரியா, முத்துராமன்
சகுந்தலா, பாலாஜி
நடித்த



ஸ்ரீதரின்
வைர நெஞ்சம்
கதை வசனம், டைரக்ஷன்: ஸ்ரீதர் (ஈஸ்மன் கலர்)
குறிப்பு; ஜனத்திரள் அலைமோதுவதால் காட்சி நேரங்கள் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகிறோம்.
வெளியில் வாங்கும் டிக்கட்டுகள் செல்லுபடியாகாது

ஈழநாடு
The EELANADU

## 4000 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி

கொழும்பு, வியா.

கடந்தவருடம் நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தோரில் 4000க்கும் அதிகமானோருக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் 70 வீதமானோருக்கு மிகச்சிறந்த தேர்ச்சிக்காகவும், 30 வீதமானோருக்கு மாவட்ட அடிப்படையிலும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் பல்வேறு போதனபீடங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [உ]

# நாடு வளர்ச்சிபெற

## ஆலயங்கள் அவசிய'

அரியாலை, வியாழன்

''ஒருநாட்டின் வளர்ச்சிக்கும், அந் நாட்டில் வாழும் மக்களது வளர்ச்சிக்கும் ஆலயம் அவசியம், இக் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பாள் அருளினால் இக் கிராமம் நன்கு வளர்ச்சியடைந்து வருகிறது. இக் கிராமத்தில் வாழும் மக்கள் தெய்வபக்தியுள்ளவர்களாகவும் தர்மசிந்தை உள்ளவர்களாகவும் வளரவேண்டும். இதன்மூலம்தான் நாம்இறைவனின் அன்பையும் - அருளையும் பெற்றுக்கொள்ளமுடியும்''

இவ்வாறு அரியாலை மேற்கு வெட்டுக்குளம்ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய வசந்தமண்டபத்திற்கு சங்கு ஸ்தாபிதம் செய்தவிழாவுக்குத் தலைமை தாங்கியசட்டத்தரணி எஸ். கனகரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்.

வசந்தமண்டபத்திற்கு சங்கு ஸ்தாபிதம் செய்துவைத்த சிவநெறிக்காவலர் க. கனகராசா பேசுகையில் ''தர்மம் செய்யவேண்டுமென்ற எண்ணம் மக்கள் மனதில் தோன்ற வேண்டும். தர்மத்தின்மூலம் இறைவனின் அன்பைப் பெறுவதுடன், அதர்மத்தையும் போக்கடிக்கலாம். தர்மம் தலைகாக்கும். அம்பாள் அருளினால் இக் கிராமம் வளர்ச்சியடைந்து வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. உழைப்பாளிகளின் மூலம் தான் நாட்டை உருவாக்க முடியும். சிறந்த உழைப்பாளிகள் இருக்கும் இக் கிராமத்தில் இன்று தெய்வஅருளினால் நாம் ஆரம்பித்து வைத்திருக்கும் ஆலயத் திருப்பணி மிகவும் விரைவில் நிறைவுறும்'' என்றார். (அ)

## 6 கோடி தமிழரின்

# நாடில்லாக் குறை தீர்க்க

## இறைவனால் அனுப்பப்பட்டவர்''

அரியாலை, வியாழன்

''நான் பிறந்து வளர்ந்தது வேறு பாசறை, ஆனால் தமிழர் விடுதலைக்கூட்டணி அமைக்கப்பட்ட பின்னர் அந்தப்பாசறையில் வளர்ந்துவருகிறேன். இந்தப்பாசறையில் நான் இணைந்து கொண்ட பின்னர் என்மேல் தனது அன்பையும் ஆதரவையும் நல்கி என்னைவளர்த்தவர் தந்தை செல்வா. தமிழ்ஈழம் அமைத்துத் தந்த பின்பே தந்தையின் மறைவு நிகழும் என்று நாம் நம்பியிருந்தோம். நாமும்- நம் இளைஞர்களும் போர்ப்பாசறையில் 'தமிழ் ஈழம்' காண அணிவகுத்து நிற்கும் பொழுதே எம்மைவிட்டுச் சென்றுவிட்டார்''.

இவ்வாறு யாழ்ப்பாணம் கலைமகள் வட்டார தமிழர்விடுதலைக் கூட்டணியினரால் காந்திசனசமூகநிலைய வெள்ளிவிழா அரங்கில் நடாத்தப்பட்ட தந்தை செல்வா அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபரும், நல்லூர்த்தொகுதி கூட்டணி வேட்பாளருமான திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. நா. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வஞ்சலிக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் ''கடந்த ஆறுமாதகாலங்களில் தமிழ் இனத்துக்காகத் தம்மை அர்ப்பணித்துஉழைத்தமூன்று தலைவர்களைப் படிப்படியாக இழந்துவிட்டோம். எத்தனையோ கூறுகளாகப் பிரிந்திருந்த தமிழ்மக்களை ஒரேஅணியின் கீழ், ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைத்து செயலாற்றிய பெருமைதந்தையையேசாரும். தமிழர்களுடையகட்சிகளுடன் இதுவரை எதுவிதபேச்சுவார்த்தையும் செய்துகொள்ளவிரும்பாத ஆட்சியின் முதல்வர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, தமிழ் வாலிபர்கள் தம்மை அர்ப்பணித்துச் செய்துகொண்ட தியாகத்தையும், தந்தை கட்டி வளர்த்த கூட்டணியையும் கண்டு அஞ்சிஅதனுடன் பேச்சுவார்த்தை நடத்த முற்பட்டதை நாடறியும்'' என்று கூறினர்.

கோப்பாய்த்தொகுதி வேட்பாளர் திரு. சி. கதிரவேற்பிள்ளை பேசுகையில் ''தந்தை செல்வா தமது அரசியல் வாழ்வில் சிங்களவர் தமிழரை அடக்கி ஆளக்கூடாது என்றும், தமிழர் தமிழரை அடக்கி ஆளக்கூடாதென்றும் இருதத்துவங்களை எமக்கு வலியுறுத்திச் சென்றுள்ளார். இவைகளை முன்வைத்தே தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ் ஈழம் கோருகிறது. அத்துடன் சொல்வதைச்செயலில் காட்டவே 'உடுப்பிட்டித்தொகுதியில் திரு. இராஜலிங்கத்தை வேட்பாளராக நிறுத்தியுள்ளது. கூட்டணியின் இலட்சியங்களும், கொள்கைகளும் தமிழ் மக்களிடையேசெல்வாக்குப் பெற்றிருக்கின்றன என்பதை தெளிவாக உலகுக்கு நிரூபிக்கவே திரு. இராஜலிங்கத்தைப் போட்டிக்கு நிறுத்தியுள்ளோம்'' என்றார்.

வண்ணை விவேகானந்தன் பேசுகையில், ''32நாடுகளில் பரந்து பட்டு வாழும் 6கோடி தமிழ் மக்களுக்கு ஒரு நாடில்லையே என்ற குறையை நீக்க இலங்கையில் ஒரு தமிழ் ஈழம் அமைக்க தந்தை செல்வா இறைவனால் அனுப்பப்பட்டார்'' என்றார். (அ)

## பரி. யோவான் கல்லூரி விழா

அரியாலை, வெள்ளி

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண ஆச்டீக்கன் வண. பிதா ஜே. ஜே. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்மேற்படி விழாவில் பிரதம அதிதிகளாக இலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புவியியல் பகுதித் தலைவர் பேராசிரியர் ஜோஜ் தம்பையாபிள்ளையும் அவரது பாரியாரும் கலந்துகொள்வார்கள். கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராசா கல்லூரியின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பார்.

## சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தில் வேலை நிறுத்தம்

(சுன்னாகம்)

சுன்னாகம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் நேற்று திடீரென்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

தமது சங்க எரிபொருள்விநியோகப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு நால்வர்கொண்ட கோஷ்டி ஒன்று காரில் வந்து திடீர் தாக்குதலை ஏற்படுத்தியதாகவும் இதையொட்டி பொலிசில் முறைப்பாடு செய்தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்காதபட்சத்திலேயே தாம் வேலைநிறுத்தம் செய்வதாகவும் வேலை நிறுத்தம் செய்தவர்கள் தெரிவித்தனர்

பின்னர் முன்னாள் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் சங்கத் தலைவர் திரு. கு. விநோதன் ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து தாக்குதல் நடாத்தியவர்கள் என்று கருதப்படுபவர்களை நேற்று பொலிசார் கைது செய்தனர்

நேற்று முன்தினமிரவு எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு வந்த நால்வரும் அங்கிருந்த ஊழியர் ஒருவரைத் தாக்கியதுடன் அங்கிருந்த கண்ணாடிப் பொருட்களையும் உடைத்துச் சேதப்படுத்திவிட்டுச் சென்றனராம்.

இன்று முதல் தாம் வழமைபோல் வேலைக்குச் செல்ல இருப்பதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர். (கு-இ)

## மிருகங்களுக்கு—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போம்.

''தமிழ் மக்களின் உணர்வுகளை நாம் அறியாமல் இல்லை. ஓர் இலட்சிய இயக்கத்தில் தமிழ் மக்கள் பற்றுவைத்துத் தமிழ் ஈழம் அமைப்பதற்கான உறுதியை இத்தேர்தலில் தந்து கூட்டணிச் சின்னத்திற்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையுண்டு''

மறைந்த தலைவர்கள் இறுதி நேரத்தில் ஒன்றுபட்டுஓர்இலட்சியத்திற்காக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள் என்றும் நாம் மற்றவர்களை குறைகூறி அரசியல் பேசவேண்டிய அவசியம் இல்லை என்றும்மக்கள் நன்றாக அரசியல் தெரிந்திருக்கிறார்கள் என்றும் அவர்களை ஏமாற்ற முடியாதென்றும் கூறினார்.

திரு. க. துரைரத்தினம் பேசுகையில் ஓர் இனத்தின் கலாச்சாரம்அழிந்தால் அந்த இனமே அழிந்து விடுமென்றும், ஆனால் தமிழ்ப் பிரதேசத்தில் அதுவும் கிளிநொச்சிப்பிரதேசத்தில் தமிழன் கலாச்சாரத்திற்கு மாறான முறையில் கட்டிடங்கள்அமைக்கப்பட்டுள்ளது வேதனைக்குரிய தொன்றாகும் திராவிடச்சிற்ப முறை உலகம்போற்றும் ஒன்றென்றும் கூறினார்.

திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு பேசுகையில், கூட்டணியைப் பலப்படுத்துவதற்கு அயராது பாடுபட்டவர் திரு. ஆனந்தசங்கரி என்றும் காங்கிரஸ் கட்சி வேட்பாளராகக் கடந்த தேர்தலில் போட்டியிட்டு ஆட்சிமன்றம் சென்றவர்களில் இவர்ஒருவரே கூட்டணி அமைப்பதற்குத் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தார் என்றும்கூறினார்.

மற்றும் திருமதி அமிர்தலிங்கம் ஐ. திருஞானம், இ. கிருஷ்ணராஜா, பொன். சபாபதி, கே. நாகலிங்கம், பொன். சத்தியசீலன் ஆகியோரும் பேசினர்.

கரைச்சிக்கிராம சபைத்தலைவர் திரு. செல்லையா கூட்டத்திற்குதலைமைவகித்தார். (அ)

## சிவாவுக்கு ஆதரவு

கோண்டாவில், வியா.

நல்லூர் தொகுதி த. வி. கூட்டணி வேட்பாளர் திரு. மு. சிவசிதம்பரத்திற்குத் தமது ஆதரவு உண்டென்று கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையம் தெரிவித்துள்ளது. (உ)

## வழமைபோல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுத்தவரை காங்கேசன்துறை-கொழும்பு இரவு ரயில்சேவை நாளை மறுதினம் (சனிக்கிழமை) இரவு முதல் தான் வழமையான நிலைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு சனிக்கிழமை இரவு ரயில் சேவைகள் நடைபெறும் அதே நேரத்தில் காலை கடுகதி ரயில் சேவையும் வழமைபோல் நடைபெறும்.

ரயில் சேவைகள் இவ்வாரம் முதல் வழமையாக நடைபெறும் என்று நேற்று முன்தினம் ''ஈழநாடு'' பிரத்தியேகமாக செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## தீண்டாமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஒழிப்புச் சட்டத்தால் எமது மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. கடந்த பத்து ஆண்டுகளில் நாம் எமது உரிமைக்காகப் போராட்டங்கள் நடத்திய வேளை வடபகுதி பாராளுமன்றஉறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதும் சகல மக்களும் நன்கறிவர்.

எமது மக்களின் சார்பாக கடந்த காலங்களில் செனட் சபையிலும் பாராளுமன்றத்திலும் பிரதிநிதிகள் இருந்தார்கள். ஆனால் அவர்களால் எமது மக்களின் உரிமைகள் பெறப்படவில்லை. அதற்குப் பதிலாக ஒதுக்கப்பட்ட மக்கள் 1966-ம் ஆண்டு அக்டோபர் 21 எழுச்சியின் மூலம் உருவாகிய போராட்டங்களினாலேயே எமது மனித உரிமைகளை நிலைநாட்ட முடிந்தது என்பது மீண்டும் மீண்டும் நினைவூட்டப்படல் வேண்டும்.

எனவே எமது வெகுஜன இயக்கம் எதிர்வரும் தேர்தலை நிராகரித்து எமது மக்களைத் தேர்தலில் பங்குகொள்ள வேண்டாம் எனவும் வேண்டுகின்றது. அதே வேளை கடந்த 10 ஆண்டுகளுக்குமேல் தமது உரிமைகளை வென்றெடுத்த பாதையான போராட்டப் பாதை மூலம் மேலும் முன்னேறுமாறு வேண்டுகின்றோம். (இ)

## விரைவில் ஆரம்பம்!

வடக்கு, வடமத்திய மாகாணத்திலுள்ள வியாபாரிகள், பொதுமக்களின் வசதிக்காக இலங்கைத் தோல் பொருட் கூட்டுத்தாபனம் 8, 9, 10, ஹரிச்சந்திர மாவத்தை, அனுராதபுரத்தில் புதிய டி. ஐ. மொத்த விநியோக, சில்லறை விற்பனை நிலையத்தை 1977 ஜூன் 15ம் திகதி ஆரம்பிக்கவிருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றது.

அறிமுக ஆரம்பச் சில்லறை விற்பனை விலையில் ஜூன் 15ம் திகதி முதல் ஜூலை 14ம் திகதி வரை வாங்கலாம்.

இலங்கை தோல் பொருட் கூட்டுத்தாபனம்

DI FOOTWEAR

டி. ஐ. அசல் தோல் பாதணிகள் உங்கள் பாதங்களைப் பேணுபவை.

6408

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்வன்கோவில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna: Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.